Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO. 11/2023
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 06 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. நடராஜன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. இராமசந்திரன் | தொழில் | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஒய்வு |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 03rd th day of february 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** (எதிரி ஆஜர்)

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போதுஓய்வு பெற்று விட்டேன். நான் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் கடந்த 02.07.2022 அன்று பூபதி மனைவி மங்கம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 183/2022 இதச பிரிவுகள் 457, 380 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 02.07.2022 அன்றைய தினமே மாலை 5.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சண்முகம், சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ.9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் மேலும், இவ்வழக்கு எதிரி ஆனவர் திருப்பத்தூர் நகர காவல் நிலைய குற்ற எண். 248/2022 என்ற வழக்கில் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கிலும் ஈடுபட்டது தெரியவந்து எதிரியிடம் இருந்து 4 1/2 சவரன் ஆரம் 1 மற்றும் 1/2 சவரன் கம்மல் ஒரு

சதை ஆகியவற்றை காவல் ஆய்வாளர் கைப்பற்றி தகவல் அளித்ததன் பேரில் எதிரி இந்த வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். மேலும், எதிரியிடம் இருந்து கைப்பற்றபட்ட பொருட்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(அந்த படிவம் 95 அ.சா.ஆ–10 ஆக குறியீடுசெய்ப்படுகிறது.)** பின்னர் புகார்தார் மனு செய்து அந்த பொருட்களை இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார். பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380 கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

. புகார்தாரர் புகாரை அவரே எழுதி கொண்டு வந்தார். அந்த புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காலதாமதமாக புகார் அளித்ததற்கு புகார்தார் விளக்கம் ஏதும் அளித்தாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்த ஒரு நாள் கழித்து தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக இரவில் காவல் நிலையத்தில் தகவல் அளித்தவுடன் 1 மணி நேரத்தில் சென்று பார்வையிட்டேன். புகார் அளித்த போது புகார்தாரருடன் 2 முதல் 6 சாட்சிகள் இருந்தார்கள் என்றால் சரிதான். திருடு போன பொருட்கள் புகார்தாரருடையது என்பதை நிருபணம் செய்ய இரசீதுகள் ஏதேனும் ஆஜர் செய்தார்களா என்றால் இல்லை. எதிரியை நான் திருப்பத்தூர் காவல் நியைத்தில் வைத்து தான் பார்தேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆனது திருப்பத்தூர் நகர காவல் நிலைய வழக்கில் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளை கூட திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளர் தான் விசாரித்தார் என்றால் சரிதான். மகசர் சாட்சிகளை நான் சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்க வில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தேன் என்றாலும் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரி இவ்வழக்கில் ஈடுபட்டத்றகு இணையாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்ய வில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.01
Thirupattur